# துவாக்குடி நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of Council |
|---|---|---|---|
| **25.05.2017** | | **2017ம் ஆண்டு மே மாதம் 25–ம் தேதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க கூட்டம் நடைபெறும்.**<br><br>**தனி அலுவலர்,**<br>**துவாக்குடி நகராட்சி.** | |
| **25.05.2017** | **51** | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.7760/2016/IT, நாள்.11.05.2017ல் தெரிவித்துள்ளவாறு, தகவல் தொழில்நுட்பம் (Information Technology Service Delivery) இந்நகராட்சியில் கீழ்கண்ட சேவைகள் அனைத்தும் மின்னணு வாயிலாக செயல்படுத்திட தேவையான அறிவிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

## Notification

In the exercise of the powers conferred by sub-rule [1] of rule 5 of the Tamil Nadu Information Technology (Electronic service Delivery] Rules 2016, Commissioner, Thuvakudi Municipality, hereby notifies the public services specified in column [2] of the Table below to be the services that can be delivered through electronic mode under the Electronic Service Delivery System and the other relevant particulars as specified in column [3] thereof:

| Sl.No | Name of the public services that can be delivered through Electronic mode | | Designated officer for the delivery of the service |
|---|---|---|---|
| 1. | | Make Payment | |

| | | | |
|---|---|---|---|
| 7. | | Name Transfer of Property | Revenue Inspector |
| 8. | | Assessment Enhancement | |
| 9. | | Vacant Land | |
| 10. | Water Charges | Connection Search | Municipal Engineer |
| 11. | | View DCB | |
| 12. | | View Payment History | |
| 13. | | View Connection | |
| 14. | | View Connection History | |
| 15. | | Make Payment | |
| 16. | Under Ground Drainage System | Application for New assessment | NA |
| 17. | | Payment for Deposit | |
| 18. | | Make Payment | |
| 19. | Profession Tax | Assessment Search | Revenue Inspector |
| 20. | | View DCB | |
| 21. | | View Payment History | |
| 22. | | View Connection | |
| 23. | | View Connection History | |
| 24. | | Make Payment | |
| 25. | Non Tax | Search Non Tax Property | Revenue Inspector |
| 26. | | View DCB | |
| 27. | | View Allotment | |
| 28. | | View Payment History | |
| 29. | | View allotment History | |
| 30. | | Make Payment | |
| 31. | Trade License | Registration of trade License | Sanitary Inspector |
| 32. | | Renewal of License | |
| 33. | | Make payment | |
| 34. | Birth & Death Registration | Printing of Birth Certificate | Sanitary Inspector |
| 35. | | Printing of Death Certificate | |
| 36. | | Birth Certificate correction | |
| 37. | | Death Certificate correction | |
| 38. | | Child name inclusion | |
| 39. | | Request for Birth Correction | |
| 40. | | Request for Death Correction | |
| 41. | | Search Birth Registration | |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>42.</td><td></td><td>Search Death Registration</td><td></td></tr>
<tr><td>43.</td><td rowspan="3">Building Plan Approval</td><td>Submission of New Application</td><td rowspan="3">Town Planning Inspector</td></tr>
<tr><td>44.</td><td>Online submission of Revised Building Plan</td></tr>
<tr><td>45.</td><td>Make payment</td></tr>
<tr><td>46.</td><td rowspan="2">Grievances</td><td>Online Registration of Grievances</td><td rowspan="2">Manager</td></tr>
<tr><td>47.</td><td>Status of Complaints/Grievances</td></tr>
</table>
<br>
அலுவலகக்குறிப்பு :-
<br>
1. மேற்படி அறிவிக்கையினை மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியிடாக வெளியிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
<br>
2. மேற்படி அறிவிக்கையினை வெளியிட ஆகும் செலவினம் ரூ.20,000/–ற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
<br>
ந.க.எண்.579/2017/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>25.05.2017</td>
<td>52</td>
<td>
<u>பொருள் எண். 2</u>
<br>
துவாக்குடி நகராட்சி அலுவலக பொறியியல் பிரிவில் பயன்பாட்டில் உள்ள JCB வாகனம் எண். TN 45 BY 2588 –ன் பேட்டரி பழுதடைந்துள்ளதால் வாகனத்தை இயக்க இயலாமல் உள்ளதால் நகராட்சியின் பொறியியல் பணிகளை மேற்கொள்ள முடியாமல் சிரமம் ஏற்படுவதால் மேற்கண்ட வாகனத்தின் பழுதடைந்த பேட்டரியை மாற்றி புதிய பேட்டரி பொருத்த உண்டான உத்தேச செலவினம் ரூ. 10,000/– ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<br>
அலுவலக குறிப்பு : – 1920 தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் மேற்கொண்ட செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
<br>
ந.க.எண். 1453/ இ1 / 2015
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>25.05.2017</td>
<td>53</td>
<td>
<u>பொருள் எண். 3</u>
<br>
<u>பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016</u>
<br>
சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)ல் பிரிவு 3, 6 மற்றும் 25களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு பிளஸ்டிக் கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016ஐ இயற்றியுள்ளது. இந்த பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு நகராட்சியும் தனது அதிகார எல்லைக்குட்பட பகுதியில் பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்தல், பயன்படுத்துதல், விநியோகம் செய்தல் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை சேமித்தல், தரம் பிரித்தல், எடுத்துச் செல்லுதல் மற்றும்
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

இறுதியாக்கம் செய்தல் போன்ற பணிகளை முறைப்படுத்த அந்தந்த நகராட்சிக்கு பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**துவாக்குடி நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306ன் கீழ் இயற்றப்பட்டுள்ளது.**

1.0 தலைப்பு : இது துவாக்குடி நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணைவிதிகள் 2016 என்று அழைக்கப்படும்.

2.0 செயல்பாடு எல்லை : இந்தத் துணைவிதிகள் துவாக்குடி நகரின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து பொது இடங்களுக்கும் மற்றும் மாநகரத் திடக் கழிவுகள் ஏற்படுத்தும் அனைவருக்கும் மற்றும் துவாக்குடி நகராட்சி எல்லைக்குள் தனியார் உரிமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் அனைத்து வளாகங்களுக்கும் பொருந்தும்.

3.0 வரையறை : இந்தத் துணைவிதிகளில் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள வரையறை செய்யப்படாத சொற்கள் மற்றும் அவை உணர்த்தும் பொருள் வெளிப்பாடுகள், சூழல் மாற்றாகக் கொள்ள தேவை இல்லை என்றால், முறையே துவாக்குடி நகராட்சி சட்ட (**மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920**) த்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறு இருக்கும் கீழ்கண்ட சொற்களின் பொருள்கள் இங்குப் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன.

**"சட்டம்" :-சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 (29 of 1986 )**

1. **அங்கீகரிக்கப்பட்ட உரிமையாளர்கள்:–** (Brand owner) பதிவு செய்யப்பட்ட சின்னத்தின் கீழ் அல்லது பெயரின் கீழ் பொருள்கள் விற்கும் நபர் அல்லது நிறுவனம்.
2. **தூக்குபைகள்:–**பொருள்களை சுமந்து செல்லும் வகையில் பிளாஸ்டிக் பொருள்கள் அல்லது மக்கும் தன்மையுள்ள பிளாஸ்டிக் பொருளால் செய்யப்பட்ட ஒரு சுமை தாங்கும் அம்சம் கொண்ட பைகள்.
3. **சரக்கு :–**விற்கவோ அல்லது வாங்கவோ செய்யப்படும் அனைத்து சந்தைப்படுத்தப்படும் பொருட்கள் அல்லது சாதனங்கள்.
4. **உரமாகும் பிளாஸ்டிக்:–**உயிரியல் செயல் முறைகள் மூலம் பிளாஸ்டிக் உடைதலுக்கு உள்ளாக்ககூடிய வழக்கமான பெட்ரோ சார்ந்த பிளாஸ்டிக் தவிர்த்து அழைக்கப்படுகின்ற பிளாஸ்டிக்.
5. **சிதைவு:–**ஒரு பொருளை மிகவும் சிறிய துண்டுகளாக ஆக்குதல்.
6. **அங்கீகாரம்:–**மாநில மாசுக்கட்டுபாட்டு வாரியம் அல்லது மாசுகட்டுபாட்டுகுழு உள்ளாட்சி அமைப்பிற்கோ அல்லது நிறுவனத்திற்கோ அனுமதி அளித்தல்.
7. **துணை விதிகள்:–**உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் எல்லைகளுக்குள் விதிகளை திறப்பட

செயல்படுத்தி எளிதாகவும் கட்டுப்பாட்டு கட்டமைப்பு.

8. **நீடித்த தயாரிப்பாளர்கள் பொருப்பு:–**பிளாஸ்டிக், தகரம், கண்ணாடி மற்றும் நெளி பெட்டிகள் போன்ற பொருட்களின் இறுதிநிலை வரை சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கா வண்ணம் பாதுகாப்பது தயாரிப்பாளரின் பொருப்பு.
9. **உணவு பொருள்கள்:–**சாப்பிட தயாராக உள்ள உணவு பொருள்கள் விரைவு உணவு, பதப்படுத்தப்பட்ட அல்லது திரவ உணவு, உணவுத்துாள், ஆகியவை உணவுப்பொருளாக்களில் அடங்கும்.
10. **வசதி:–**பிளாஸ்டிக் கழிவுகள் தொகுப்பு, சேமிப்பு மறுசுழற்சி, செயலாக்கம் மற்றும் அகற்றல் ஆகியவை மேற்கொள்ளப்படும் வளாகங்கள்.
11. **உற்பத்தியாளா்:–**ஒரு நபர் அல்லது நிறுவனம் பிளாஸ்டிக் உற்பத்தியில் ஈடுபடுவது.
12. **பிளாஸ்டிக் தாள்:–**பிளாஸ்டிக் பொருளால் உருவாக்கப்பட்ட பிளாஸ்டிக் தாள்
13. **பிளாஸ்டிக் கழிவுகள்:–**பிளாஸ்டிக், பயன்படுத்திய பிறகு அல்லது திட்டமிடப்பட்ட பயன்பாடு முடிந்தவுடன் அப்புறப்படுத்தப்படுகின்ற பொருள்கள்.
14. **மறுசுழற்சி:–**ஒதுக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளிலிருந்து புதிய தயாரிப்பு செய்வது.
15. **தண்டம் (Fine):-** பிளாஸ்டிக் கழிவுகள் உற்பத்தி செய்பவர்கள், செயலாக்கம் செய்பவர்கள் ஆகியோர் விதிகள் மற்றும் துணைவிதிகளை மீறும்பட்சத்தில் விதிக்கப்படும் தண்டம்.
16. **முறைசாரா கழிவு சேகரிப்பவர் (Informal waste collector):–** மறுசுழற்சி பொருள்களை சேகரித்தல், வகைபடுத்துதல், விற்பனை செய்தல், தனிநபர்கள், சங்கங்கள், அல்லது கழிவுபொருள்கள் பணியில் ஈடுபடும் கொள்முதல் செய்யும் வர்த்தகர்கள்.
17. **உள்ளாட்சி(local body) :–**இந்த விதிகளை செயல்படுத்தும் நோக்கில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நகரசபை, நகர் நிகாம், மாநகரசபை, நகர் பாலிகா, பரிஷத், நகராட்சி, பஞ்சாயத்து மற்றும் பேருராட்சி, வரையருக்கப்பட்ட (Notified) பகுதிகள் வரையருக்கப்பட்ட தொழிற்துறை குடியிருப்புகள் (Notified Industried Townships) என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் அமைப்புகள்.
18. **பொருட்கள் மீட்பு வசதி(Materials recovery facility ):–** உள்ளாட்சி அமைப்புகளாலோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களாலோ திடக்கழிவுகளிருந்து மறுசுழற்சிக்குரிய முறைசாரா கழிவு சேகரிப்பவர்கள் அல்லது உள்ளாட்சி அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது பணி அமர்த்தப்பட்டவர்களால் மெற்கொள்ள ஏற்படுத்தப்பட்ட வசதி.
19. **வகை பிரித்தல்(sorting )–**கலவையான கழிவுகளிலிருந்து பொருத்தமான கழிவுகளை பல்வேறு கூறுகளாக காகிதம், பிளாஸ்டிக், உலோகங்கள், கண்ணாடி என மறுசுழற்சி பொருள்களாக பிரித்தல்.

| | | | |
|---|---|---|---|
| | | 20. **தெருவிற்பனையாளர் (அ) தெரு ஓர சாலை வியாபாரிகள் (Street Vendor):-** ஒரு தெரு, சந்து, பக்க நடைபாதை, நடைபாதை, பொது பூங்கா அருகில் அல்லது வேறு எந்த பொது இடத்திலோ அல்லது தனியார் பகுதியில் ஒரு தற்காலிகமாக கட்டியெழுப்பப்பட்ட அமைப்பில் இருந்தோ, அல்லது ஒரு இடத்தில் இருந்து மற்ற இடத்திற்கு நகர்ந்து சென்றோ, சுற்றிதிரிந்தோ உணவுபொருள்கள், காய்கறிகள், பழங்கள், அன்றாட பயன்பாட்டு பொருளையோ விற்பவர்கள்.<br><br>21. **கழிவு உருவாக்குபவர் (Waste Generator):-**ஒரு நபர் அல்லது குழு குடியிருப்புகள் அல்லது குடியிருப்பு அல்லாத இடங்களில், வணிகநிறுவனங்கள், இந்திய ரயில்வே பகுதிகள், மற்றும் பாதுகாப்பு அமைப்புகள் உட்பட திடக்கழிவு உருவாக்குபவர்களை குறிக்கும்.<br><br>22. **முகமை(Agency)** : தெருவைப் பெருக்குதல், கழிவுகளை எடுத்தல், பயனர் கட்டணம் பெறுதல் போன்றவற்றிற்காக, முகமைக்கும் துவாக்குடி நகராட்சிக்கும் ஒப்பந்தம் அடிப்படையில் கடமைகளை ஆற்றும் துவாக்குடி நகராட்சியால் அமர்த்தப்பட்ட அல்லது தனக்காகச் செயல்பட அதிகாரம் வழங்கப்பட்ட தனியார் நிறுவனம்.<br><br>4.0 <u>கழிவு உருவாக்குபவர்களின் கடைமைகள்–</u><br><br>1) கழிவு உருவாக்கும் ஒவ்வொருவரும் பிளாஸ்டிக் கழிவு உருவாக்கத்தை குறைக்கவும், பிளாஸ்டிக் கழிவுகளை உருவாகும் இடத்திலேயே பிரிக்கவும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அல்லது அவ்வப்போது ஏற்படுத்தக்கூடிய விதிகளின் கீழ் செயல்படவேண்டும்.<br>2) **50 மைக்ரான் அடர்த்தி அளவிற்கு குறைவாக அல்லது அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் அடர்த்தி அளவிற்கு குறைவாக உள்ள ஏற்கனவே உபயோகப்படுத்தாத அல்லது மறுசுழற்சிக்கான அல்லது மக்கக்கூடிய கைப்பைகளை எந்த ஒரு நபரும் தயாரிக்கவோ அல்லது இருப்பு வைக்கவோ விநியோகிக்கவோ அல்லது விற்பனை செய்வதோ கூடாது**. மீறினால் **பொருள்களை பறிமுதல் செய்வதுடன்** அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.<br>3) **நகராட்சி எல்கைக்குள் ஒருமுறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக்பைகள்,பிளாஸ்டிக் கேரிபைகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட தட்டுக்கள், பிளாஸ்டிக்கப்புகள், பிளாஸ்டிக் டம்ளர்கள், பிளாஸ்டிக் மேஜைவிரிப்புகள், பிளாஸ்டிக் தாள்கள் ஆகியவையும் தடை செய்யப்படுகின்றன.** மீறினால் | |

**பொருள்களை பறிமுதல் செய்வதுடன்** அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.

4) **மறுசுழற்சிக்கான அல்லது மக்கக்கூடிய பொருள்களை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட கைப்பைகளைக்கொண்டு உணவுப்பொருள்களை சேமிக்கவோ அல்லது எடுத்துச்செல்லவோ விற்பனை செய்யவோ அல்லது மொத்தமாக கட்டவோ கூடாது**

5) பிளாஸ்டிக் கழிவுகளை தெருக்களிலோ, பொது இடங்களிலோ, சாலை ஓரங்களிலோ, நீர்கால்களிலோ, நீர்நிலைகளிலோ போடக்கூடாது. மீறினால் அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.

6) **வீடுகளில் உருவாகும்** பிளாஸ்டிக் கழிவுகள் உருவாகும் இடத்திலேயே தனியாக பிரித்து சேகரித்து உள்ளாட்சி அமைப்பிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட முகமையிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட குப்பை சேகரிப்பர்களிடமோ வழங்கவேண்டும்.

7) உணவு விடுதிகள், பிற நிறுவனங்கள், அலுவலகங்கள், ஆகியவற்றில் உருவாக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை உள்ளாட்சி அமைப்பிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட முகமையிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட குப்பை சேகரிப்பர்களிடமோ வழங்கவேண்டும்.

8) கழிவுகள் உருவாக்கும் அனைவரும் நகராட்சியால் ஏற்படுத்தப்பட்ட துணைவிதிகள் சேகரிப்பு மற்றும் மேலாண்மை வசதிகளுக்குரிய பயனர் கட்டணம் செலுத்தவேண்டும்.

9) திறந்த வெளியில் நிகழ்சி நடத்தும் நிகழ்சி அமைப்பாளர்கள் நிகழ்சியின் போது உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகளை தனியாக பிரித்து சேகரித்து உள்ளாட்சி அமைப்பிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட முகமையிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட குப்பை சேகரிப்பர்களிடமோ வழங்கவேண்டும்.

10) **பிளாஸ்டிக்** குப்பைகள் உருவாக்குபவர்கள் யாரும் தங்களால் உருவாக்கப்படுகின்ற **பிளாஸ்டிக்** குப்பைகளினை தெருக்களிலோ, **பொ**து இடங்களிலோ நீர் நிலைகளிலோ எரிவதோ. எரிப்பதோ அல்லது புதைப்பதோ கூடாது.

**5.0** குறியீடு மற்றும் பெயரிடல் (Marking and Labelling):–

1) ஒவ்வொரு பிளாஸ்டிக் கேரிபை**யிலும் கீழகண்ட விவரங்கள் ஆங்கிலம்** (அ) உள்ளூர் **மொழியில் அச்சடித்து இருக்க வேண்டும்**

a. **தயாரிப்பாளர் பெயர்,பதிவு எண்,பையின் அடர்த்தி(THICKNESS)**
b. **பல அடுக்கு பைகளாக(MULTI LAYERED PACKING) இருப்பின் தயாரிப்பாளர் பெயர் மற்றும் பதிவு எண் குறிப்பிடவேண்டும்**

2) ஒவ்வொரு மறுசுழற்சி **கைப்**பைகளிலும் “ **மறு சுழற்சிக்கானவை” என** இந்திய தர **நிர்ணயம்** IS.14534.1998 **இல் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றும் அதனடிப்படையில் அவ்வப்போது மறுசுழற்சிக்கான பிளாஸ்டிக் குறித்து அறிவிக்கப்படும் வழிகாட்டுதலின்படி இருக்கவேண்டும்**.

3) ஒவ்வொரு **மக்கும் கைப்**பைகளிலும் “ **மக்கக்கூடியவை” என** இந்திய தர **நிர்ணயம்** IS.17088.2008 **இல் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றும் அதனடிப்படையில் அவ்வப்போது பிளாஸ்டிக் குறித்து அறிவிக்கப்படும் வழிகாட்டுதலின்படி இருக்கவேண்டும்**.

**6.0 கடைகாரர்கள், சில்லரை விற்பனையாளர்கள் மற்றும் தெரு விற்பனையாளர்கள் பொறுப்பு**

**1)** சில்லரை விற்பனையாளர்கள் மற்றும் தெரு விற்பனையாளர்கள் விதிகள் கீழ் பரிந்துரைக்கப்படும் குறியீடுகள் மற்றும் பெயர்கள் இல்லாத கேரிபைகள் அல்லது பிளாஸ்டிக் தாள், அல்லது பல அடுக்கு பேக்கேஜ் ஆகியவற்றை விற்கவோ அல்லது அவற்றில் பொருட்கள் வழங்கவோ கூடாது. அவ்வாறு விற்பது தண்டனை குற்றம். இது அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.

**2)** பொருட்களை 50 **மைக்ரானிற்கு மேற்பட்ட** கேரிபைகளில் வழங்க தயாராக உள்ள கடைக்காரர்கள் தெரு விற்பனையாளர்கள் சில்லறை விற்பனையார்கள் நகராட்சியில் வருடத்திற்கு ரூ 48,000 (மாதம் ரூ 4000 ) பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை கட்டணம் செலுத்தி பதிவு செய்யவேண்டும். ஆண்டுதோறும் கட்டணம் செலுத்தி பதிவை புதுப்பிக்கவேண்டும்.

**3)** நகராட்சியில் பதிவுசெய்யப்பட்ட விற்பனையாளர்கள் ‘‘ பிளாஸ்டிக் கேரிபைகள் வழங்க கட்டணம் வசூலிக்கப்படும் ‘‘ என விளம்பரம் செய்திட வேண்டும்.

**4)** நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட கடைகாரர்கள் சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் தெரு விற்பனையாளர்கள் மட்டுமே கேரிபைகள் வழங்க தகுதி உடையவர்கள்.**பதிவு செய்யாமல் பிளாஸ்டிக் கேரிபைகள் விற்பனை,பொருள்கள் வழங்குதல்,ஆகியவை தண்டனைக்குரிய குற்றம்.** இது அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.

**7.0 நகராட்சியின் கடமைகள்**

a. பொருட்களை 50 மைக்ரானிற்கு மேற்பட்ட கேரிபைகளில் வழங்க தயாராக உள்ள

கடைக்காரர்கள் தெரு விற்பனையாளர்கள் சில்லறை விற்பனையாளர்களினை பதிவு செய்து சான்று வழங்கல்.

b. பிளாஸ்டிக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து இருப்பு வைத்து தரம் பிரித்து எடுத்துச்சென்று முடிவு செய்தலை உறுதி செய்யவேண்டும்.

c. பிளாஸ்டிக் கழிவுகளை முடிவு செய்யும் போது சுற்றுப்புற சூழல் பாதிககாவண்ணம் மேற்கொள்ளவேண்டும்.

d. பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்கும் பணியில் தயாரிப்பாளர்களையும் பங்கு பெற செய்யவேண்டும்.

e. மறுசுழற்சிக்கான வழிகளை உறுதி செய்யவேண்டும்.

f. கழிவுகளை கையாளும் பணியில் தனியார் நிறுவனங்கள் குழுக்கள் மற்றும் கழிவு சேகரிப்போரையும் பங்கேற்க செய்யவேண்டும்.

g. பிளாஸ்டிக் கழிவுகளை திறந்த வெளியில் எரிப்பதை தடை செய்து அதனை உறுதி செய்யவேண்டும்.

h. தகவல், கல்வி, தொடர்பின் மூலம் பொதுமக்களுக்கும் கழிவுகளை உற்பத்தி செய்பவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும்.

8.0 **<u>இந்தத் துணை விதிகளை மீறினால் செலுத்தும் தண்டம்</u>**

8.1 இந்தத் துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்குப் பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கைக் காலம் 90 நாள்கள் உண்டு. அதற்குப் பிறகு இந்தத் துணைவிதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணை (அட்டவணை–1) படி இந்தத் துணைவிதி மீறும் நிகவு ஒவ்வொன்றுக்கும் அபராதத் தொகையுடன் தண்டிக்கப்படுவர். கழிவு உருவாக்குபவர் இந்தத் துணைவிதிகள் ஏதாவது ஒன்றை மீறுவதாக கண்டால் அடுத்த முறை தண்டத் தொகை இரட்டிப்பாகும்.

8.2 துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசுபடுத்துபவர் அட்டவணை –1 ல் குறிப்பிட்டுள்ளபடி தண்டத்தொகை கட்ட இயலவில்லை என்றால் அவன்/அவள்–க்கு எதிராக நகரக் காவல் சட்டம் மற்றும் மாவட்டக் காவல் சட்டம்/ இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி வழக்கு தொடரப்படும்.

9.0 **<u>தண்டனை</u>**

துணைவிதிகளில் குறித்துள்ள விதிகளை மீறுபவர் அல்லது துணைவிதிகளில் குறித்துள்ள விதிகளை மீறும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைக்குப் பாதுகாவலனாக இருப்போர் நடைமுறையில் உள்ள சட்டத்தின் அடிப்படையில் தண்டனைக்கு உரியவர் எனக் கருதப்படுகின்றனர்.

10.0 **<u>மேல் முறையீட்டிற்கு உரிமை</u>**

துவாக்குடி நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் துணைவிதிகள் 2016 ஆல் இடர் உற்ற அல்லது பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமை உள்ளவர்களாவர். இந்தத் துணை விதிகள் துவாக்குடி நகராட்சி மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்ற

பின் நடைமுறைக்கு வரும்.

| வ. எண் | துணை விதிகள் | உட்பிரிவும்/ துணை விதிகள் விளக்கமும் | சட்டத்தை மீறினால் செலுத்த வேண்டிய தண்டத் தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | 4(2) | 50 மைக்கரான் அடத்திக்கு குறைவான பிளாஸ்டிக் கேரிபைகள் பயன்படுத்துதல்<br>தயாரித்தல்<br>இருப்பு வைத்தல்<br>விநியோகித்தல்<br>விற்பனை செய்தல் | 5000/<br>2000/<br>1000/<br>1000/ (பொருள் பறி முதல்) |
| 2. | 4(3) | ஒருமுறையே பயன்படுத்தப்பட்டு வரும் பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் கேரிபைகள், தட்டுகள், டம்ளர்கள், மேஜைவிரிப்புகள், பிளாஸ்டிக் தாள்கள் | (பொருள் பறி முதல்) 1000/ மேல் |
| 3. | 4(4) | பிளாஸ்டிக் பைகளில் உணவு பொருள்களை சேமித்தல், விற்பளை செய்தல் | (பொருள் பறி முதல்) 1000/ மேல் |
| 4. | 4(5) | பிளாஸ்டிக் கவர்களை நீர்நிலைகளில் கொட்டுதல் | 1000/ |
| 5. | 4(6) | வீடுகளில் பிளாஸ்டிக் கழிவுகளை தனியே வழங்காமல் இருத்தல் | 100/ |
| 6. | 4(7) | உணவகங்கள், அலுவலகங்கள், தனியே வழங்காமல் இருத்தல் | 500/ |
| 7. | 4(9) | திறந்த வெளியில் நிகழ்ச்சி நடத்துபவர்கள் பிளாஸ்டிக் கழிவுகளை முறையாக வழங்காமல் இருத்தல் | 1000/ |
| 8. | 4(10) | பிளாஸ்டிக் கழிவுகளை எரித்தல்<br>தனிநபர்<br>நிறுவனம் | 200/<br>500/ |
| 9. | 6(1) | குறியீடு அல்லது பெயர் இல்லாத பிளாஸ்டிக் பைகள் விற்பனை அல்லது பொருள்கள் வழங்குதல் | (பொருள் பறி முதல்) 1000/ மேல் |
| 10. | 6(4) | பதிவு செய்யாமல் பிளாஸ்டிக் கேரிபைகள் விற்பனை செய்தல், பொருள் வழங்குதல் | (பொருள் பறி முதல்) 1000/ மேல் |

பொதுமக்களது ஆலோசனைகள் மற்றும் நாளிதழில் பிரசுரம் செய்து க்குள் எழுத்து பூர்வமாக பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| | | | |
|---|---|---|---|
| | | <u>**அலுவலகக்குறிப்பு –**</u><br>1, மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நாளிதழில் விளம்பரம் செய்து பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளின் மீது இறுதி முடிவு எடுக்க ஆணையாளருக்கு முழு திகாரம் வழங்கலாம்.<br>3. நாளிதழ் விளம்பர செலவுத் தொகை மற்றும் விளம்பரம் போன்ற இதர செலவினங்கள் மேற்கொள்ள உத்தேச செலவின தொகை ரூ.1.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கிடலாம்<br>4. மாவட்ட அரசிதழில் அறிவிப்பு வெளியிட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளமன்றம் அனுமதி வழங்கிடலாம்<br>**ந.க.எண். / எச்1 / 2017** | |
| 25.05.2017 | 54 | <u>**பொருள் எண். 4**</u><br>துவாக்குடி நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை இரண்டாம் நிலை குப்பை சேகாரம் செய்யும் துப்புரவு பணிக்கு கீழ்கண்ட வாகனம் மற்றும் பின் (Bins) வாங்கி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>1) Mini Compactor – 30.00 இலட்சம்<br>2) 45 Compactor Bins – 18.00 இலட்சம்<br><u>**அலுவலக குறிப்பு**</u> – மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 619 / எச்1 / 2017** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 25.05.2017 | 55 | <u>**பொருள் எண். 5**</u><br>துவாக்குடி நகராட்சியின் 2015–16 ம் ஆண்டு தணிக்கை அறிக்கை தயார் செய்தமைக்கு கீழ்கண்ட விவரப்படி செலவின பில் பட்டியல் A.J.M Xerox என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது.<br>1) 2015–16 ம் ஆண்டு தணிக்கை அறிக்கை கணினியில் தட்டச்சு செய்தல் – ரூ. 5000/–<br>2) தணிக்கை அறிக்கை 7 நகல்கள் எடுக்க – ரூ. 5000/–<br>3) தணிக்கை அறிக்கையினை 7 எண்ணிக்கை புத்தகம் தயார் செய்ய – ரூ. 5000/–<br>எனவே மேற்கண்ட விவரப்படியான பில் பட்டியல் தொகை ரூ. 15000/– மட்டும் A.J.M Xerox நிறுவன உரிமையாளர் திரு. S. சிவசுப்ரமணி என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு**</u> – மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 497 / அ1 / 2017** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 25.05.2017 | 56 | <u>**பொருள் எண். 6**</u><br>துவாக்குடி நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN 45 BY 4097 வாகனத்திற்கு 2017–18 ம் ஆண்டு காப்பீட்டுத் தொகை ரூ. 25614/– மட்டும் செலுத்த தெரிவித்து National Insurance Company Limited என்ற நிறுவனத்திடமிருந்து பில்பட்டியல் வரப்பெற்றுள்ளது, எனவே மேற்படி தொகை ரூ. 25614/– மட்டும் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு**</u> – மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 394 / எச்1 / 2017** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 25.05.2017 | 57 | <u>**பொருள் எண். 7**</u><br>துவாக்குடி நகராட்சியின் தணிக்கைக் கட்டணம் 2014–15 ம் ஆண்டிற்கு ரூ. 38425/– மட்டும் செலுத்த தெரிவித்து உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை திருச்சிராப்பள்ளி அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படியான தொகை ரூ. 38425/– ஐ தணிக்கை துறைக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு**</u> – மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 11 / அ1 / 2017** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 25.05.2017 | 58 | <u>**பொருள் எண். 8**</u><br>துவாக்குடி நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த கட்டணம் நிர்ணயம் செய்வது தொடர்பான அறிவிப்பினை தினத்தந்தி நாளிதழில் 04.04.2017 –ம் தேதி வெளியிட்டமைக்கு கட்டணம் ரூ. 353,38/– மட்டும் செலுத்த கோரி Bright Advertising நிறுவனத்திடமிருந்து பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது, எனவே மேற்படியான நிறுவனத்திற்கு தொகை ரூ. 35338/– மட்டும் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு**</u> – மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 594 / எச்1 / 2017** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 25.05.2017 | 59 | <u>**பொருள் எண். 9**</u><br>துவாக்குடி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அரசாணை எண். 105 நாள். 21.7.2015 –ம் தேதிய உத்திரவின்படி தனிநபர் கழிப்பிடம் கட்டும் பணி மான்ய தொகையை பயன்படுத்தி கட்டப்பட்டு வருகிறது. தனி நபர் கழிப்பிடம் கட்டும் பயனாளிகளுக்கு கிழ்கண்ட விவரப்படி மான்ய தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது.<br>1. நகராட்சி மான்யம் – ரூ. 2000/–<br>2. மாநில அரசு மான்யம் – ரூ. 2000/–<br>3. மத்திய அரசு மான்யம் – ரூ. 4000/–<br>4. தனியார் சமூக பொறுப்புணர்வு மான்யம் – ரூ. 3000/– | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | தற்போது தனிநபர் கழிப்பிடங்கள் கட்ட கட்டுமான பொருட்கள் மற்றும் மணல் விலையேற்றம் ஆகி உள்ளதாலும், இந்நகராட்சி எல்லைக்குள் உட்பட்ட இடங்களில் குவாரி மிகுந்த பாறைகள் உள்ளதால் உடைக்க அதிக செலவினத் தொகை ஏற்படுவதால் வரிசை எண். 4–ல் கண்டுள்ள தனியார் சமூக பொறுப்புணர்வு மான்ய தொகையினை ரூ. 3000/– ல் இருந்து ரூ. 4000/– ஆக உயர்வு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** – அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 1226/ எச்1/ 2016** | |
| 25.05.2017 | 60 | **பொருள் எண். 10**<br>துவாக்குடி நகராட்சியின் ஆணையர் திருமதி. ந. ஸ்ரீதேவி அவர்கள் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். சி1/5381/2015 நாள். 29.12.2016–ன் படி துவாக்குடி நகராட்சிக்கு பணி மாறுதல் செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்கண்ட பணி மாறுதலுக்கான பயணப்படி ரூ. 5310/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 1101 / சி1 / 2017** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

______________ X ______________